தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௪௫	திருவள்ளுவர் யாண்டு உ௲௧ சௌமிய, தை 1970 — சனவரி — பிப்ரவரி	மலர் ௧௰

வரலாற்றுக் கண்ணோட்டத்தில் மொழியியல்

(தற்காலம்)

கி. அரங்கன், எம்.ஏ., பி.ஓ.எல்.

புதுமையை நோக்கி இளைஞர் சமுதாயம் ஓடும்போது முதியோர் சமுதாயம் பழமையில் அதிகப் பற்றுக் காட்டும். பழமையிலேயே ஊறி வளர்ந்த அந்த மூதிய சமுதாயம் தன்னுடைய மனதையே அதில் பறிகொடுத்துவிடுகிறது. ஆனால் இளைஞர் சமுதாயத்திற்கு பழமையிடம் பழகுகின்ற வாய்ப்பு மிகக் குறுகியது; ஆகையால் மனதைப் பறிகொடுக்கின்ற நிலை இந்தச் சமுதாயத்திற்கு இல்லாமல் போய்விடுகிறது. இவர்களுடைய மனம் புதுமையை நாடி ஓடுவதிலேயே நாட்டம் காட்டும்! இந்த இரண்டு சமுதாயத்தின் போக்குமே நமக்கு நல்லதுதான் வருகின்ற எதிர்கால சமுதாயத்திற்கு இரண்டையுமே சீர்தூக்கி எடைபோடுகின்ற வாய்ப்புக்கிட்டுகிறது.

இந்தப் போக்கு அறிவியல் துறைகளிலும் காணக்கூடிய ஒன்றுதான்! அறிவியல் கண்ணோட்டத்தோடே வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளையும் பார்க்கவேண்டும் என்ற துடிப்பைக் கொண்ட காலம் இந்த இருபதாம் நூற்றாண்டு இதற்கு மொழி மட்டும் விதிவிலக்கல்ல. மொழியின் அமைப்பையும் அறிவியல் முறைகளுக்கு உட்பட்டு ஆராய்கின்ற துறையைத்தான் மொழியியல் [Linguistics] என்று கூறுகிறோம். மேலை நாடுகளில் நன்கு வளர்ந்துகொண்டிருக்கிற இத்துறை நம்முடைய நாட்டிற்குப் புதிது. பதினைந்து ஆண்டுகளாகத்தான் மொழியை ஆராய்கின்ற ஒரு பரம்பரை நம் நாட்டிலும் பெருகிக் கொண்டிருக்கிறது. ஆனால் மொழியை மேலை நாட்டினரும் வியக்கும் வண்ணம் ஆராய்ந்த ஒரு பெரும் பரம்பரை நமக்கு முன்னால் இருக்கிறது. இடைக்காலத்தில் மொழியை முறையாக ஆராய்கின்ற ஒரு கூட்டத்தை நாம் இழந்துவிட்டோம்.

இவ்விருபதாம் நூற்றாண்டில்தான் திரும்பவும் மொழி ஆராய்ச்சியை ஒரு அறிவியலாகக் கருதுகின்ற கூட்டம் வளர்ந்துகொண்டிருக்கிறது.

மொழியை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஆராய்வதுதான் மொழியியல் என்ற நிலையிலிருந்து ஒரு பெரும் திருப்பத்தை இந்த நூற்றாண்டு ஏற்படுத்தியது. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் மொழியியலை இரண்டாகத் தெளிவான விளக்கம் அளித்து மொழியியலார் பிரித்தார்கள். மொழியை வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு ஆராய்கின்ற பிரிவை வரலாற்று மொழியியல் [Historical Linguistics] என்றும் கால ஓட்ட அடிப்படையின் நின்று விலகி ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட மனிதனின் பேச்சு மொழியையோ ஒரு சமுதாயத்தின் மொழியையோ ஆராய்கின்ற மொழியியலை விளக்க மொழியியல் [Descriptive Linguistics] என்றும் கூறுகிறோம். விளக்க மொழியியலின் அடிப்படையில் மொழியின் அமைப்பை அறிந்தாலன்றி கால ஓட்டத்தில் மொழி மாறுகின்ற தன்மையை வரலாற்று மொழியியலில் நாம் உணர முடியாது. ஆகையால் விளக்க மொழியியல் மொழியின் ஆராய்ச்சிக்கு அடிப்படையாக அமைந்து விடுகிறது. மொழி கால வெள்ளத்தில் மாறிக்கொண்டே போகிறது. மொழி மாறுகின்ற இயல்பை உடையது என்ற தன்மையை உணர்ந்தால்தான் விளக்க மொழியியலும் வரலாற்று மொழியியலும் மொழியின் இயல்பைக் காட்டுவதில் பெரும் பங்கு வகிக்கிறது என்பதை அறிய முடியும்.

விளக்க மொழியியலின் இன்றியமையாமை இந்நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் நன்கு உணரப்பட்டது. ஆகையால் விளக்கமொழியியல் அறிஞர்களின் கவனத்தைக் கவர தொடங்கியது. விளக்க மொழியியல் மொழியியலில் வகிக்கின்ற முக்கியத்துவத்தை தெளிவாக விளக்கியவர் சசூர் [Saussure] என்ற அறிஞர். வரலாற்று மொழியியலின் தன்மைகளையும் விளக்க மொழியியலின் தன்மைகளையும் தெளிவாக விளக்கியவர் இவர்தான் விளக்க மொழியியல் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்தது. புளூம்பீல்டு [Bloom Field] சபீர் [Sapir] போன்ற அறிஞர்கள் அமெரிக்காவில் விளக்க மொழியியல் வேரூன்ற உழைத்தார்கள் சபீர், மொழியை உளவியல் அடிப்படையில் நின்று நோக்க ஆரம்பித்தார். ஆனால் புளூம்பீல்டு இவ்வுளவியல் முறையை விளக்கிப் புறநடப்பு [Behaviour] முறையை மேற்கொண்டு ஆராய முற்

பட்டார். மொழியியல், அறிவியல் துறைகளுள் ஒன்றாகையால் அதில் கூறப்படும் முடிவுகளும் முறைகளும் புறத்தில் ஆராயக் கூடிய தன்மையனவாய் இருக்க வேண்டும். ஆராய்கின்றவனின் உள்ளுணர்வை மட்டும் மொழியியல் அடிப்படையாகக் கொள்ளக்கூடாது. ஆகையால் மொழியியலின் முறையும் முடிவும் மற்றைய அறிவியலோடு ஒட்டியிருக்க வேண்டுமென்பது இவருடைய வாதம்.

புளூம்பீல்டு வகுத்த வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு மொழியை நோக்குகின்ற மொழியியலை, அமைப்பு மொழியியல் [Structural Linguistics] என்று கூறலாம். ஹேரிஸ் [Harris], காக்கெட் [Hockett], பிளாக் [Bloch] போன்ற அறிஞர்கள் இப்பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள். மொழி என்பது செய்திகளை வெளியிடக்கூடிய ஒரு கருவி என்பது இவர்கள் கருத்து. சமுதாயத்தின் இயக்கத்திற்கு இது ஒரு காரணமாக அமைந்து கிடக்கிறது. பிளாக் என்ற அறிஞரும் டிரேகர் [Trager] என்ற அறிஞரும் மொழி என்பதை சமுதாயத்தின் கூட்டியக்கத்திற்குக் காரணமாக அமைந்துள்ள பேச்சொலிக் குறிகளின் அமைப்பு என்று கூறியிருக்கிறார்கள்[1] மொழியியல் என்ற அறிவியலின் கருப்பொருள் [Data] பேச்சு மொழி, பேச்சு வழக்கில் இல்லாத மொழிகளுக்கு இலக்கிய நூல்களும் கல்வெட்டுக்களும் கருப்பொருளாக அமையும். வழக்கில் உள்ள மொழிகளுக்கு பேச்சு அடிப்படைக் கருவாக அமைகிறது. அமைப்பு மொழியியலார் நோக்கில் மொழியியல் மூன்று பெரும் பிரிவுகளை உடையது. மொழி என்பது மொழியப்படுவது. பேச்சொலிக் குறிகளின் அமைப்பு மொழி என வரையறுக்கப்பட்டதை நாம் மேலே பார்த்தோம். ஒலிகளின் தொடர்ச்சங்கிலியே மொழியின் அடிப்படை. இவ்வொலிகளான தொடர்ச் சங்கிலியால்தான் பேசுபவன் தன்னுடைய கருத்தை உணர்த்தவும் கேட்போன் பேசுபவனுடைய கருத்தை உணரவும் முடிகிறது. ஆகையால் மொழிகளில் அமைந்து கிடக்கிற ஒலிகளின் அமைப்பை ஆராய்வது மொழியியலின் முக்கிய கடமைகளுள் ஒன்றாக அமைகிறது. ஒரு மொழியின் பேச்சில் உள்ள எல்லா ஒலிகளும் இன்றியமையாதவையாய் இருப்பது இல்லை. சில ஒலிகள் தான் அம்மொழியின் செய்தித் தொடர்பிற்கு இன்றியமையாதவையாய் உள்ளன. சான்றாக

1. 'A language is a system of arbitary vocal symbols by means of which a social group co-operates' Bloch and Trager 'Outline of Linguistic Analysis' p. 5.

தமிழில் | க | என்ற ஒலியன் [Phoneme] இருக்கிறது. இதற்கு மூன்று மாற்றொலிகள் [Allophones] உண்டு.

கப்பல் [kappal] 'ship'
மகன் [maxan] 'son'
தங்கம் [tangam] 'gold'

| க | என்ற ஒலியனுக்கு [k] என்ற ஒலியும் [x] என்ற ஒலியும் [g] என்ற ஒலியும் இருப்பதை நாம் மேலே காட்டிய சான்றுகளால் தெளிவாகலாம். இதுபோன்று பேச்சு மொழியில் உள்ள ஒலியன்களை ஆராய்கின்ற பகுதியை ஒலியியல் [Phonology] என்று அமைப்பு மொழியியலார் கூறுவர்.

அமைப்பு மொழியியலில் ஒலியியலுக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் வாய்ந்தது உருபியல் அல்லது சொல்லியல் [Morphology]. ஒலிகள் தொடர்ந்து நின்று சொல்லை உருவாக்குகிறது. சொற்களின் தொடர்ச்சியே வாக்கியம். சொற்களில் உருபன்கள் [Morphemes] அமைந்து கிடக்கின்ற முறைமையை உருபியல் விளக்கும். இதற்கு உயர்ந்த நிலை தொடரியல் [Syntax] ஆராய்ச்சி வாக்கியத்தில் அமைந்துள்ள சொற்களின் முறைமையும் அச்சொற்களுக்கு இடையே உள்ள உறவு முறைமையும் [Relations] இத்தொடரியலில் ஆராயப்படும். அமைப்பு மொழியியல் தொடரியலை விளக்குவதில் வெற்றி காணவில்லை. அமைப்பு மொழியியலின் கொள்கைகளையும் அதனுடைய நிலைகளையும் விளக்கிக் கட்டுரைகளும் நூல்களும் சில, தமிழில் வெளிவந்திருக்கின்றன.[2]

தொடரியலில் அமைப்பு மொழியியலின் தோல்வி ஒரு புதிய சிந்தனையைத் தோற்றுவித்தது; தொடரியலை விளக்க ஹேரிஸ் இடமாற்று முறையை மேற்கொண்டார். அதே காலக்கட்டத்தில் [1950 - 55] சோம்சுகி [Chomsky] அறிஞரும் மொழியின் தொடரியலை விளக்க இடமாற்று முறையைக் [Transformation] கையாண்டார். ஆனால் சோம்சுகியின் இடமாற்று முறையும் ஹேரிஸின் இடமாற்று முறையும் அடிப்படையிலேயே வேறுபாடு உடையன. சோம்சுகி தன்னுடைய கொள்கைகளை விளக்கி 1957-ஆம் ஆண்டு 'தொடரியல்

2. சீனுவாசன், ரா. (1960) 'மொழியியல்'
பொற்கோ 'மொழியியல்—அறிமுகம்' தமிழணங்கு ஜூன், ஜூலை (1967) இதழ்கள் 8, 9.
முத்துச்சண்முகம் 'இக்காலத்தமிழ்'

அமைப்புகள்' [Syntactic Structures] என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டார். இந்நூல் மொழியியலின் வரலாற்றில் ஒரு பெரிய திருப்புமுனை என்று கூறலாம். மொழியியலில் சோம்சுகியின் சிந்தனை ஒரு புரட்சியாக அமைந்துவிட்டது. அமைப்பு மொழியியலின் கொள்கைகள் எந்த அளவிற்கு மொழியின் இயல்புகளை விளக்குவதில் தவறுகின்றன என்பதை வெகு அழகாக இதில் அவர் விளக்கியிருக்கிறார். இலக்கணம் என்பது வெறும் பேச்சின் ஒலிகளையும் சொற்களையும் வெட்டிப் பாகு படுத்துவது அல்ல; இலக்கணம் என்பது மொழியில் அமைந்து கிடக்கின்ற எல்லா வாக்கியங்களையும் பிறப்பிக்கக் கூடிய ஒரு வித சாதனம் ஒரு மொழியில் எண்ணிலடங்கா வாக்கியங்கள் உள்ளன இலக்கணம் என்ற சாதனம் மொழியில் உள்ள எண்ணிலடங்கா வாக்கியங்கள் அனைத்தையும் தோற்றுவிக்க வேண்டும். இலக்கணப் பிழையான வாக்கியங்களை [Ungrammatical Sentences] இவ்விலக்கணம் தோற்றுவிக்காது.[3] இம் மாற்றிலக்கணம் மொழி பேசுகின்றவனின் மொழி அறிவைக் காட்ட முயலுகிறது. சோம்சுகியின் 'தொடரியல் அமைப்புகள்' என்ற நூலின்படி மாற்றிலக்கணம் மூன்றுவித விதிகளை உடையது.

1. மாற்று விதிகள் [Transformational Rules]
2. தொடரமைப்பு விதிகள் [Phrase Structure Rules]
3. உருபொலியன் விதிகள் [Morphophonenemic Rules]

இப்புதிய இலக்கண முறைமொழிகளின் தொடரியலைச் செவ்வனே விளக்குகின்றன. உலகில் உள்ள பல்வேறு மொழிகளையும் இம்மாற்றிலக்கண முறையைப் பயன்படுத்தி அறிஞர்கள் ஆராய்ந்து வருகிறார்கள், அமைப்பு மொழியியல் விட்ட இடத்தை மாற்றிலக்கணம் வெற்றிகரமாக முடித்திருக்கிறது. சோம்சுகியே தன்னுடைய 'தொடரியல் அமைப்புகள்' என்ற நூலில் கூறிய பலவற்றை இப்பொழுது மாற்றிவிட்டார். காட்சு [Katz], போசுதல் [Postal], லீசு [Lees] போன்ற அறிஞர்கள் இவ்விலக்கண அமைப்பின் முறையைப் பல வழிகளில் திருத்தியிருக்கிறார்கள், சோம்சுகி தன்னுடைய 'தொடரியல் கொள்கைகளின் கூறுகள்' [Aspects of the theory of syntax] என்ற நூலில் மாற்றிலக்கணம் மூன்று பெரும் பகுதிகளை

3. 'The grammar of L will thus be a device that generates all of the grammatical sequences of L and none of the ungrammatical ones'...2 .. Chomshy, N 'Syntactic structures' (1962) Second Printing.

உள்ளடக்கியது என்று குறிப்பிட்டிருக்கிறார் இந்நூலில் கூறப்பட்டிருக்கின்ற மூன்று பெரும் பிரிவுகளும் முன்னையதிலிருந்து வேறுபட்டவை. முன்பு கூறிய மாற்று விதிப்பகுதியும் தொடரமைப்பு பகுதியும் இப்பொழுது தொடரியல் பகுதி [Syntactic Component] என்பதில் அடங்கிவிடுகின்றன உரு பொலியன் ஒலியியல் பகுதியில் [Phonological Component] அடங்கும். பொருளியல் பகுதி [Semantic Component] என்ற ஒன்று புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது மாற்றிலக்கணம் தொடரியல் பகுதி, பொருளியல் பகுதி, ஒலியியல் பகுதி என்ற மூன்று பகுதிகளைக்கொண்டது. தொடரியல் பகுதி வாக்கியங்களைத் தோற்றுவிக்கும். தொடரியலால் தோற்றுவிக்கப்பட்ட வாக்கிய அமைப்பிற்கு பொருளியல் பகுதி பொருள் விளக்கம் [Semantic Interpretation] அளிக்கும் ஒலியியல் பகுதி இவ்வாக்கிய அமைப்பிற்கு ஒலி வடிவம் கொடுக்கும் கிளைப்படம் (1) மாற்றிலக்கண அமைப்பைத் தெளிவாக்கும்



வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது மாற்றிலக்கணம் அமைப்பு மொழியியல் விட்ட இடத்தை வெற்றிகரமாக ஆராய்வதுபோல் தோன்றும். ஆனால் இவர்களுடைய சிந்தனை மொழியை நோக்குகின்ற கோணங்களிலேயே வேறுபடுகின்றன. மாற்றிலக்கணத்தார் கூற்றுப்படி மொழி எண்ணிலடங்கா வாக்கியங்களை உடையது. இலக்கணம் அவைகளைத் தோற்றுவித்து அமைப்பு விளக்கமும் பொருள் விளக்கமும் அளித்தல் வேண்டும். இலக்கண விதிகள் ஓர் எண்ணில் [Finite] அடங்கியவை. மேலும் மாற்றிலக்கணத்தார் பேசு

வோனின் மொழி அறிவை அறிய முற்படுவதால் இவர்கள் மன வழி அணுகலை [Mentalistic Approach] மேற்கொள்கிறார்கள். அமைப்பு மொழியியலார் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட மனிதனின் மொழியை ஆராய்வதைத்தான் அடிப் படையாகக் கொள்கிறார்கள். இவர்கள் எழுதுகின்ற இலக் கணம் தாங்கள் ஆராய்கின்ற அந்தப் பேச்சு வழக்கிற்கு மட்டி லும்தான் உரியது. ஆகையால் மொழி என்பது எண்ணிறந்த வாக்கியங்களை உடையது அல்ல; இவர்கள் ஆராய்கின்ற மனி தனின் பேச்சு வழக்கில் வாக்கியங்கள் ஓர் எண்ணில் அடங் கியவை மேலும் இவர்கள் காலத்தையும் கட்டுப்படுத்தி வரையறுத்துவிடுகிறார்கள். இவர்களுடைய ஆராய்ச்சி வாக் கியங்களை வகைப்படுத்துவதிலும் வெட்டிப் பிரிப்பதிலுமே நின்றுவிடுகிறது அமைப்பு மொழியியல் தன்னுடைய முடிவு களையும் விளக்கங்களையும் தான் ஆராய்கின்ற கருப்பொரு ளான பேச்சோடு சுருக்கிக்கொள்கிறது. உளவியல் செல்வாக்கு எக்காரணத்தைக்கொண்டும் தன்னுடைய அணுகலில் நுழை யக்கூடாது. ஆகையால் மாற்றிலக்கணத்தின் அடிப்படைக் கொள்கைகளும் அணுகல் முறைகளும் அறிவியல் முறைக்கு மாறுபட்டன என்பது இவர்களுடைய வாதம். சோம்சுகியும் அவர்வழி நிற்கும் மாற்றிலக்கணத்தாரும் இடைக்காலத் தத்துவ அறிஞர்களான டெகார்டே [Descartes] போன்றவர் களின் செல்வாக்கால் பாதிக்கப்பட்டவர்கள்; ஆகையால் இவர்கள் அடிப்படையே தவறான ஒன்றிலிருந்து எழுவதால் மொழியியல் அறிவியல் என்ற தன்மையை இழந்துவிடுகிறது. இத்தாக்கும் எதிர்ப்பும் அமைப்பு மொழியியலாரின் முகாமி லிருந்து வந்தவை. இனி மாற்றிலக்கணத்தாரின் எதிர் தாக்கலையும் தங்கள் கொள்கைகளை நிலைநாட்ட அவர்கள் தருகின்ற சான்றுகளையும் காண்போம்.

மனித இனத்தை மற்றைய விலங்குகளிலிருந்து பிரிக்கின்ற முக்கியமான ஒன்றுள் மொழி முதன்மையானது மொழி என்பது மனித இனத்தின் தனி உடமை. மனிதன் பிறக்கும் பொழுதே பேசுகின்ற ஆற்றலோடு பிறக்கிறான். அவன் பேசு கின்ற மொழிதான் சமுதாயத்திற்கு ஏற்றவாறு அமைகிறது. ஒருவனுக்கு ஒரு மொழி தெரியும் என்று சொன்னால் புதிய புதிய சூழலுக்குத் தக்கவாறு புதிய புதிய வாக்கியங்களைப் படைக்கவும் முடியும்; புதிய சூழலில் புதிய வாக்கியங்களைக் கேட்டால் புரிந்துகொள்ளவும் முடியும்.[1] இந்த ஆக்கல் ஆற் றலை [Creative Power] அடிப்படையாகக் கொண்டுதான் மொழி யியல் தொடங்கவேண்டும். இதை மறந்துவிட்டு அமைப்பு

பழமொழி நயம்.

பேராசிரியர். திரு. வ. பெருமாள், எம்.ஏ., பி.டி., எம்.ஆர்.ஏ.எஸ்.,

தமிழ்ப் பழமொழிகள் எதுகை, மோனை, சந்த இன்பம், நகைச்சுவை, முரண்நயம், உவமைச் சிறப்பு, அணி நயம், அமைப்பு நயம் முதலிய பல்வேறு சிறப்பியல்புகளைப் பெற்றுக் கற்போர் செவிக்கும் சிந்தைக்கும் பெருவிருந்து அளித்த வண்ணம் இருக்கின்றன, சுருங்கக் கூறுமிடத்துத் தமிழ்ப் பழமொழிகள் யாவும் கவிதைக் கூறுகள் பெற்றுக் கவிதை யழகுடன் திகழ்கின்றன. தமிழ்ப் பழமொழியை ஓரடிக் கவிதை என்றுகூடச் சொல்லலாம், நாலடியார் நாலடிக் கவிதையாக வும் திருக்குறள் ஈரடிக் கவிதையாகவும் விளங்குவதுபோல் பழமொழி ஓரடிக் கவிதையாக விளங்குகின்றது. பழமொழிக் கவிதையின் நயத்தை இங்குச் சிறிது ஆராய்வோம்.

[301-ஆம் பக்கத் தொடர்ச்சி]

மொழியியல் மொழியை அணுகுகிறது. மேலும் இவர்கள் மொழிக்கற்பதை நினைவிலிருத்தலிலும் [Momory] திருப்பிக் கூறுகின்ற [Imitation] நிகழ்ச்சிகளிலுமே விளக்க முற்படு கிறார்கள்; இது அமைப்பு மொழியியலார் பிறப்பிலேயே உட னுறைகின்ற [Innate] ஆக்க ஆற்றலை மறந்துவிட்டதைத்தான் குறிக்கிறது. ஆகையால் மொழியின் அடிப்படையான இயல் பையே புறக்கணித்து இவர்களுடைய சிந்தனை ஆரம்பமாவ தால் இவர்கள் எழுதுகின்ற இலக்கணங்கள் மொழியின் உண்மையான தன்மையை விவரிப்பதில் தவறிவிடுகின்றன. தூண்டல் [Stimulus] எதிர்த்தூண்டல் [Response] போன்ற புற நிகழ்ச்சிகளை மட்டும் அடிப்படையாக வைத்து மொழியை விளக்குகின்ற நிகழ்ச்சி தோல்வியில்தான் முடியும். இதனால் தான் அமைப்பு மொழியியலார் தொடரியலை விளக்கும்பொழுது தோல்வியுற்றுவிட்டார்கள் என்பது இவர்களுடைய வாதமாக அமைகிறது. இளைஞர் சமுதாயம் புதிய புதிய சிந்தனைகளை அள்ளித் தெளித்துக் கொண்டிருக்கிறது மொழியியலில்! மொழியியலும் இவைகளைத் தன்மயமாக்கி வளர்ந்துகொண்டே யிருக்கிறது.

---

4. மாற்றிலக்கணத்தாரின் மொழிக் கண்ணோட்டத்தை அறிய அரங்கனின் (1969) 'விலங்குகள் பேசுமா?' (தமிழ்ப் பொழில் 43 ; 13-21) என்ற கட்டுரையைப் பார்க்கவும்.

எதுகைப் பழமொழி.

கவிதையடியிலுள்ள ஒவ்வொரு சொல்லும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத்தக்க எதுகை நயம் வாய்ந்த பழமொழிகள் தமிழில் மிகுதியாக அமைந்திருக்கின்றன. எதுகை செவி யின்பம் தரவல்லது என்பது எல்லோரும் அறிந்த உண்மை.

உள்ளத்தில் உள்ளதை முகம் வாயிலாக அறியலாம் உள்ளத்தில் உவகை இருந்தால் முகத்தில் மலர்ச்சி தோன்றும். உள்ளம் துயரத்தில் ஆழ்ந்திருக்கும்போது முகத்தில் துன்ப ரேகை படர்ந்திருப்பதைக் காணலாம். மனத்திற்கும் முகத்திற்குமிடையே நேர் தொடர்பும் நெருங்கிய தொடர்பும் உண்டு என்பது உளவியல் உண்மை. இவ்வுண்மையைப் பழமொழியும் உணர்த்துகின்றது. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்;' அகம் முகம் ஆகிய இரு சொற்களிலும் அமைந்துள்ள எதுகை நயம் ஈண்டு நோக்கி மகிழத்தக்கது

உலகத்திலுள்ள ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஒவ்வொரு தனிப்பண்பு உண்டு. சிங்கத்திற்குக் கம்பீரம், புலிக்கு வீரம் யானைக்கு வலிமை, கவரிமானுக்குத் தன்மானம், மானுக்கு இனிமை, காளைக்கு உழைப்பு, பசுவுக்கு அடக்கம், நாய்க்கு நன்றியுணர்வு, மயிலுக்கு அழகு, குயிலுக்குக் குரல், அன்னத்திற்கு நடை, புறாவிற்கு அமைதி, எறும்புக்குச் சுறுசுறுப்பு என்று இவ்வாறு ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஒரு தனிப் பண்பு இயற்கையாகவே அமைந்திருப்பதைக் காணலாம். அவ்வாறே கோழிக்குஞ்சுக்கு அச்சம் மிகுதி. கோழைத்தனத்திற்கு எடுத்துக்காட்டு கோழிக்குஞ்சு. ஆனால் அச்சம் கொண்டவனை மிகச் சாதாரண கோழிக்குஞ்சும் துரத்திவிடும் இவ்வுண்மை பழமொழியாகக் காட்சியளிக்கின்றது. 'அஞ்சினவனைக் குஞ்சும் விரட்டும்;' என்பது பழமொழி. கோழையைக் குறிப்பிடும்போது கோழிக்குஞ்சு மனமுள்ள கோழை (Chicken hearted coward) என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவதுண்டு

அடியாத மாடு படியாது

அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உண்டு

அண்டை வீட்டுச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி.

கட்டை விளக்குமாற்றுக்குப் பட்டுக் குஞ்சம் கட்டினாற் போல

கல் ஆனாலும் கணவன் புல் ஆனாலும் புருடன்.

நெல்லுக் குத்துகிறவனுக்குக் கல்லுப் பரீட்சை தெரியுமா?
கள்ள மனம் துள்ளும்.

கள்ளிக் கொம்புக்கு வெள்ளிப்பூண் கட்டினது போல

குடிக்கிற பாலை வெடிப்பிலே வார்க்கிறதா?

குடிக்கிற வீடு விடியுமா?

குடி உடையான் முடி உடையான்.

குப்பையிலே முளைத்த கீரை கப்பலுக்குப் பாய்மரம் ஆகுமா?

மேற்குறித்த பழமொழிகளில் அமைந்துள்ள எதுகை நயம் செவியின்பம் பயந்தவண்ணம் இருக்கின்றன.

மோனைப் பழமொழி.

கவிதையடியிலுள்ள சொற்களில் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை (Alliteration) எனப்படும். எல்லாச் சொற்களிலும் அமைந்துள்ள முதல் எழுத்து ஒன்றி வந்தால் முற்று மோனை எனப்படும். தமிழ்ப் பழமொழியில் மோனை நயம் ஏனைய நயங்களை விடச் சிறந்து விளங்குகின்றது என்று சொல்லலாம்.

அக்காவை உயர்வாகவும் தங்கையைத் தாழ்வாகவும் எண்ணுகின்ற மனப்பான்மை நம் சமுதாயத்தில் ஓரளவிற்கு உண்டு என்பதைத் தமிழ் பழமொழி காட்டுகின்றது

அக்கச்சி உடைமை அரிசி, தங்கச்சி உடைமை தவிடா? இன்று அரசாங்க உத்தியோகத்தை (Government Service) மக்கள் மேற்கொள்ள விரும்புவதைப்போல அன்று. குறைந்த ஊதியம் பெற்றாலும் அரசனிடத்தில், அரண்மனையில் பணி புரிவதே மிகச் சிறப்பாகக் கருதப்பட்டது. அவ்விருப்பத்தின் பயனாகத் தோன்றிய பழமொழிதான் இது :-

'அரைப்பணச் சேவகமானாலும் அரண்மனைச் சேவகம் போல் ஆகுமா?' மனிதன் தன் உடைமையை இழந்து விட்டால் அவன் மனம் கலங்கித் திரிவதை நாம் காண்கின்றோம். அத்துயரக் காட்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறது ஒரு பழமொழி: ஆடு கெட்டவன் ஆடித்திரிவான், கோழி கெட்டவன் கூவித்திரிவான்,

மோனைப் பழமொழிகளில் சில பின்வருமாறு :

'கடனோடு கடன் கதம்பம் காற்பணம்.

'கனவில் கண்ட கத்தரிக்காய் கறிக்காகுமா ?'

'கொடும்பாவியானாலும் கொண்ட மாமியார் வேண்டும்.'

செல்லும் செல்லாததுக்குச் செட்டியார் இருக்கிறார்.

தங்கம் தரையிலே தவிடு பானையிலே.

நடு ஊரில் நச்சுமரம்.

பங்குனி என்று பருப்பதும் இல்லை, சித்திரை என்று சிறுப்பதும் இல்லை

புண்ணிலே புளி பட்டது போல.

மோனை நயம் வாய்ந்த பழமொழிகள் மிகப்பல இருப்பினும் ஒரு சிலவற்றை மட்டுமே இங்குக் குறிப்பிட்டோம்.

சந்த இன்பப் பழமொழி.

எதுகை மோனையைத் தவிரச் செவிக்கு இன்பம் கொடுக்க வல்ல ஒலிநயம் வாய்ந்த பழமொழிகளும் தமிழில் உண்டு :

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே'

என்னும் பாரதியார் பாட்டு நம் சிந்தைக்குமட்டுமன்று செவிக்கும் பெருவிருந்தாக இருப்பதுபோலத் தமிழ்ப் பழமொழிகளில் சில அத்தகைய இசைநயம் பெற்று நமக்குச் செவி இன்பம் பயக்கின்றன, மகளிர்க்கு ஆக்கும் ஆற்றலும் அழிக்கும் ஆற்றலும் உண்டு என்பதை, ஒரு பழமொழி உணர்த்துகிறது. ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே.

பணத்திற்கு எல்லா வலிமையும் உண்டு என்பதைப் 'பணம் பந்தியிலே குலம் குப்பையிலே' என்னும் பழமொழி கூறுகின்றது.

ஆல் பழுத்தால் அங்கே
அரசு பழுத்தால் இங்கே

'வண்டி ஓடத்திலே ஓடம் வண்டியிலே'

சங்கு உடைந்தது மண் கரைந்தது.

கையிலே செபமாலை கக்கத்திலே கன்னக்கோல்

காலுக்குத் தக்க செருப்பு

கூலிக்குத்தக்க உழைப்பு.

முதலிய சந்த இன்பப் பழமொழிகள் இங்கு நோக்கத் தக்கன.

நகைச்சுவைப் பழமொழிகள்.

இலக்கியச் சுவைகளில் தலையாயது நகைச்சுவை. எனவே தான் தொல்காப்பியரும் நகைச்சுவையை முதலில் குறிப்பிட்டார்.

'நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப'

(தொல்காப்பியம்: பொருளதிகாரம்: மெய்ப்பாட்டியல்) கேட்போரைச் சிரிக்கவைக்கக்கூடிய பழமொழிகள் தமிழில் மிகுதியாக உண்டு.

கணவன் மனைவிக்கிடையே பல பொருத்தங்கள் இருத்தல் வேண்டும். அவற்றுள் ஒன்று உடல் பொருத்தம் சில தம்பதிகளிடையே இப்பொருத்தம் துளிகூட இராது. கணவனோ காற்றடித்தால் பறந்துவிடுவதைப்போல வாடியும், மெலிந்தும், இளைத்துப்போய் துரும்புபோல் மிக ஒல்லியாக இருப்பான். ஆனால் அவனுக்கு வாய்த்த மனைவியோ மூன்று வேளையும் மூக்குப்பிடிக்க—விலாப்புடைக்க உண்டுவிட்டு, தன் கணவன் உணவையும் சேர்த்து இரட்டைப் பங்காக உண்டு, கொழுத்து, பருத்து, பெருத்து, தடித்து, பூரித்து, உப்பி மொத்த முழு யானை போல் காட்சியளிப்பாள். கணவன் மிகச் சிறுத்தும், மனைவி மிகப் பெருத்தும் காட்சியளிக்கின்ற வேடிக்கையான தோற்றம் ஒரு பழமொழியை உண்டாக்கிற்று. இந்நாடு உழவுத் தொழிலில் தலைசிறந்ததாகையால் உழவுக்கேற்ற முறையிலும் உழவைப் பின்னணியாகக் கொண்டும் அப்பழமொழி தோன்றிற்று. 'ஐயா கதிர்போல அம்மா குதிர்போல' என்பதே அப்பழமொழி. கதிரும் குதிரும் உழவுடன் தொடர்

புடையவை—கதிர்போன்ற ஐயா தோற்றத்தையும் ஐயாவுக்கு அடுத்து நிற்கின்ற குதிர் போன்ற அம்மா தோற்றத்தையும் ஒருங்கு இணைத்து ஒப்பிட்டுக் கண்டால் யாருக்குத்தான் சிரிப்பு வராது. இப்படி மொழியில் நகைச்சுவை ததும்புவதைத் தெளிவாக உணரலாம்.

அங்கத்திலே குறைச்சல் இல்லை ஆட்டடா பூசாரி

அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா

ஆழமறியாமல் காலை விட்டுக்கொண்டேன், அண்ணுமலையப்பா காலை விடு.

அரசமரத்தைச் சுற்றியதும் அடிவயிற்றைத் தொட்டுப் பார்த்துக் கொண்டதுபோல.

சும்மா ஆடுமா சோழியன் குடுமி.

சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி.

அங்காடிக்காரியைச் சங்கீதம் பாடச்சொன்னால் வெங்காயம் கருவேப்பிலை என்பாள்.

அங்கும் இருப்பான் இங்கும் இருப்பான் ஆக்கின சோற்றுக்குப் பங்கும் இருப்பான்.

ஓட்டைச் சட்டியாயிருந்தாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி.

அடி அதிரசம் குத்து கொழுக்கட்டை.

அரைத்து மீந்தது அம்மி, சிரைத்தது மீந்தது குடுமி.

மேற்குறிப்பிட்ட பழமொழிகளில் நகைச்சுவை பொதிந்திருப்பதைக் காணலாம்.

முரண் நயம்.

இவ்வுலகத்தின் இயல்பைக் கூர்ந்தும் ஆழ்ந்தும் நோக்கினால் இவ்வுலகம் முரண்பாடுகளின் கலப்பாகவே தோன்றும். தோற்றம் மறைவு, இன்ப துன்பம், இரவு பகல், மேடுபள்ளம், நன்மை தீமை, ஆண் பெண் முதலியவற்றின் கலப்பாக இவ்வுலகம் திகழ்வதைக் காணலாம். இது ஒரு வகையான வியப்பு. மற்றொரு வகையான வியப்பு—பெருவியப்பு ஆளுக்கும் பேருக்கும் தொடர்பில்லாமல் இருப்பது மட்டுமன்று முரண்பாடாகவும் இருப்பதுதான். இத்தகைய முரண் நயம் கொண்ட பழமொழிகள் தமிழில் மிகுதி.

வெள்ளைச்சாமி கருப்பாகவும், கருப்பையன் வெளுப்பாக வும், சின்னசாமி உருவத்தில் பெரியவனுகவும், பெரியண்ணன் உருவத்தால் சிறியவனுகவும் இருந்து ஆளுக்கும் பெயர்க்கும் சிறிதும் தொடர்பே இல்லை என்று மெய்ப்பித்து வருவதை நாம் அன்ருட வாழ்க்கையில் கண்டு வருகின்ருேம். மகாராசா என்னும் பெயர் கொண்ட பிச்சைக்காரர்கள் நம் நாட்டில் பலர் உண்டு. தர்மப்பிரபு என்னும் பெயர் கொண்டவன் கடைந்தெடுத்த கஞ்சனுக இருப்பதையும் நாம் கண்டிருக் கின்ருேம். கையெழுத்துக்கூடப் போடத்தெரியாத பெண் களுக்குச் சரசுவதி, கலாவல்லி, வாணி, கலைச்செல்வி, கலைமகள் கலைவாணி முதலிய பெயர்கள் இருப்பதை நாம் காண வில்லையா? சோற்றுக்கு வழியில்லாதவள் இராணி, மகாராணி, இலட்சுமி, மகாலட்சுமி, அன்னபூரணி முதலிய பெயர்களுடன் இருப்பதை நாம் பார்த்திருக்கின்ருேம். முத்தையும் மாணிக் கத்தையும் கண்ணுல்கூடப் பார்க்காதவர்கள் முத்து என்றும் மாணிக்கம் என்றும் பெயர் வைத்துக்கொண்டிருப்பதை நாம் காண்கின்ருேம். இவை யாவும் நமக்கு ஒருபுறத்திலே வியப் பையும் மறுபுறத்திலே சிரிப்பையும் உண்டாக்குகின்றன. இத் தகைய வியப்பையும் சிரிப்பையும் ஒருங்கே உண்டாக்கவல்ல முரண் நயம் வாய்ந்த தமிழ்ப் பழமொழிகளை அறிந்து மகிழுங் கள் :-

அண்ட நிழல் இல்லாமல் போனுலும் பேர் ஆலமரம்.

அமுதுபடி பூச்சியம் ஆடம்பரம் அதிகம்.

கட்டக் கரியமணி இல்லாமல் போனுலும் பேர் பொன்னம் மாள் (முத்துமாலை)

குடிக்கிறது கூழ் கொப்பளிக்கிறது பன்னீர்.

பேர் கங்கா பவானி குடிக்கத் தண்ணீர் இல்லை.

கிண்ணி எடுக்கச் சதையில்லாமல் போனுலும் பேர் தொந்தி யாப்பிள்ளை.

எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு.

பேர் கூந்தலழகி தலை மொட்டை.

அவள் பேர் தங்கம் காதில் பிச்சோலை,

சுமப்பது சாணி பூசுவது சந்தனம்

சாண பண்டாரத்துக்கு முழம் விபூதி.

சுண்டைக்காய் கால் பணம் சுமைக்கூலி முக்காற் பணம்.

ஆடு கால் பணம் கொட்டை முக்கால் பணம்.

அம்மையார் பெறுவது அரைக்காசு அவருக்குத் தலை சிரைக்க முக்காற் காசு.

படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமான் கோயில்.

மேற்குறிப்பிட்ட முரண் நயம் வாய்ந்த பழமொழிகள் நகைச்சுவை தோன்ற உலக உண்மைகளை விளக்குகின்றன.

உவமைப் பழமொழி.

தெரியாதவற்றைத் தெரியவைக்கவும் விளங்காதவற்றை விளங்கவைக்கவும் பயன்படுத்தப்படும் உத்தியே உவமை எனப்படும். எல்லா அணிகளுக்கும் (Figures of Speech) தாயாகவும் மூலமாகவும் உள்ளது உவமை. ஒருத்தியே நாடகத்தில் பல்வேறு வேடங்கள் புனைந்து நடிப்பதைப்போல உவமை அணி ஒன்றே வெவ்வேறு வடிவங்கள் பெற்று வெவ்வேறு பெயர்களுடன் விளங்குகின்றது. இவ்வுண்மையை

'உவமை என்னும் தவலருங் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய அரங்கிற் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவர் இதயம்
நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே'

என்னும் வடமொழி அப்பைய தீட்சிதரின் சித்திர மீமாம்சைக் கூற்றினால் அறியலாம்.

தமிழ் மொழியில் உவம உருபுகள் மிகப்பல உண்டு.

அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப
என்ன மான என்றவை எனாஅ
ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க
வென்ற வியப்ப என்றவை எனாஅ
எள்ள விழைய விறப்ப நிகர்ப்பக்
கள்ளக் கடுப்ப ஆங்கவை எனாஅக்
காய்ப்ப மதிப்ப தகைய மருள
மாற்ற மருப்ப ஆங்கவை எனாஅப்
புல்லப் பொருவப் பொற்பப் போல
வெல்ல வீழ ஆங்கவை எனாஅ
நாட நளிய நடுங்க நந்த
ஒடப் புரைய என்றவை எனாஅ
ஆறு றவையும் அன்ன பிறவும்
கூறுங் காலைப் பல்குறிப் பினவே

என்னும் தொல்காப்பிய நூற்பாவும்.

'போலப் புரைய ஒப்ப உறழ
மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே'

என்னும் நன்னூல் நூற்பாவும் தமிழ்மொழியிலுள்ள உவம உருபுகளைத் தொகுத்துரைக்கின்றன.

உவம உருபுகள் பல இருப்பினும் அவற்றுள் தலையாயதும் பெருவழக்கில் உள்ளதும் 'போல' என்னும் உவம உருபே. உலக வழக்கில் உள்ள தமிழ்ப் பழமொழிகள் எல்லாவற்றிலும் 'போல' என்னும் உவம உருபே அமைந்திருப்பதைக் காணலாம். தமிழில் உவமைப் பழமொழிகள் பல உண்டு. சிலவற்றை மட்டும் இங்குக் காண்போம்.

சிலருடைய உடம்பு மிகப் பெருத்திருக்கும். வயிறு தொங்கியும் தொப்பையுமாகக் காட்சியளிக்கும். ஆனால் அவர்கள் பேச்சொலி மிக மெதுவாக இருக்கும். அவர்கள் பேசினால் அருகில் உள்ளவர்க்குக்கூடச் சரியாகக் காதில் விழாது. அவ்வளவு மெதுவாகப் பேசுவார்கள். இதைக் குறிப்பிடத் தமிழில் ஒரு பழமொழி உண்டு. 'ஊசிபோலத் தொண்டையும் சால் போல்வயிறும்.' நல்லவர்கள் புனிதமான செயல் புரிந்துகொண்டிருக்கும் நல்ல நேரத்தில் கொடியவன் எவனாவது அங்கே வந்து புனிதச் சூழ்நிலையைக் கெடுத்துவிடுவான். அப்போது நாம் 'சிவபூசையில் கரடி புகுந்தது போல' என்னும் பழமொழியைச் சொல்வதுண்டு. சிலர் தமக்கு அழிவைத் தாமே தேடிக் கொள்வார்கள். அவர்கள் செயலைக் குறிக்க 'யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டதைப்போல' என்னும் பழமொழியைச் சொல்வதுண்டு.

நாயிடம் குணமும் உண்டு; குற்றமும் உண்டு. நன்றி உணர்ச்சியில் தலைசிறந்து நிற்பது நாய். இது நாயின் உயர் பண்பு. இத்தகைய உயர் பண்புள்ள நாயிடம் ஒரு பெருங் குறையும் உண்டு நாய் தன் இனத்துடன் ஒருபோதும் ஒற்றுமையாக வாழாது இரண்டு நாய்களுக்கு இலையில் எவ்வளவு தான் மிகுதியாக உணவு இட்டாலும் அவை குரைத்துக் கொண்டும் உறுமிக்கொண்டும் சண்டையிடுமேதவிர ஒற்றுமையுடன் அமைதியாக அவ்வுணவை உண்ணமாட்டா, இது·நாம் அன்றாட வாழ்க்கையில் கண்டறிந்த உண்மை. இரு நாய்களுக்கு ஒன்றாக உணவிட்டால் என்னவாகும் என்பதை 'இரண்டு நாய்க்கு ஒரு எலும்பு போட்டது போல' என்னும்

உவமைப் பழமொழி விளக்குகின்றது. 'ஞமலி போல் வாழேல்' என்று பாரதியாரும் அறவுரை வழங்கியுள்ளார்.

எருமைக்குத் தோல் தடித்திருக்கும் அதற்கு உணர்ச்சி மிகவும் குறைவு. இடி இடித்து அடைமழை பெய்தாலும் எருமை விரைவாக ஓடாது. அப்படியே நின்றுகொண்டிருக்கும். எருமையைப்பற்றிய இவ்வுண்மையை ஒரு பழமொழி உரைக்கின்றது. 'எருமாட்டின்மேல் மழை பெய்தது போல' என்பது பழமொழி. உவமைப் பழமொழிகளில் சிலவற்றைப் பின் வருமாறு குறித்துள்ளோம் :-

இடியோசை கேட்ட பாம்பு போல

கடலில் கரைத்த பெருங்காயம் போல

கல்வி கற்றும் கழுநீர்ப் பானையில் கைவிட்டதுபோல

கன்றை இழந்த பசுவைப் போல

புலிக்கூட்டத்தில் மான் அகப்பட்டது போல

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல

பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது போல

கீரியும் பாம்பும் போல

செவிடன் காதிலே சங்கு ஊதியது போல

கையில் வெண்ணெய் வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்ததைப் போல

உவமைப் பழமொழிகள் யாவும் நம் முன்னோரின் உவமை உணர்ச்சியையும் ஒப்பு நோக்கும் திறனையும் உறுதிப்படுத்துகின்றன.

அணியியல் பழமொழிகள்.

Figurative Proverbs.

இலக்கியத்திற்கு அழகு புரிகின்ற அணி புலவர்களுக்கு மட்டும் உரியதன்று. பொதுமக்களுக்கும் உரியது. தமிழ்ப் பழமொழியில் அமைந்துள்ள அணி நயம் நம் முன்னோரின் இலக்கிய உணர்ச்சி கற்பனை நயம் முதலிய அணியியல் உளப்பாங்கை (Metaphorical bent of mind) அங்கை நெல்லிக்கனி போல் தெளிவுபடுத்துகின்றன.

திருமணத்தைக் குறிக்கும்போது பல்லாண்டு வாழ்க்கை என்று பொதுவாகச் சொல்லாமல் 'ஆயிரம் காலத்துப் பயிர்' என்று அணிநயம் படப் பழமொழியாகச் சொல்வதை நாம் இன்றும் காணலாம்.

எதைக் குறித்துப் பேசினாலும் அறுதியிட்டு உறுதியாகப் பேசவேண்டுமே தவிர விளக்கெண்ணெயில் வெண்டைக்காய்க் குழம்பு வைத்ததுபோல வழ வழ என்று பேசுதல் கூடாது என்பதை அழுத்தம் திருத்தமாக உணர்த்த விரும்பிய நம் முன்னோர் 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்று அணிநயம் படச் சொன்னார்கள்.

குறைந்த முயற்சியில் பெரும் பயன் அடைவதே (Minimum effort maxiomum profit) சாமர்த்தியம். இத்தகைய சாமர்த்தியம் வேண்டும் என்பதை வலியுறுத்த 'ஒரு கல்லிலே இரண்டு மாங்காய்' என்னும் நன்மொழியைச் சொன்னார்கள் நம் முன்னோர்கள்.

பாண்டவர்களில் ஒருவனாகிய அர்ச்சுனனுக்கு மனைவியர் பலர் உண்டு. அதைக் கற்பனை நயம் படச்சொல்ல விரும்பிய நம் முன்னோர் ஆற்று மணலை எண்ணினாலும் அர்ச்சுனன் பெண்டாட்டியை எண்ண முடியாது' என்று சொல்லிவைத்தார்கள். அக்கற்பனை மொழியே பழமொழியாகிவிட்டது

குளிர் நாட்டில் வாழ்கின்றவர்கள் வெப்பத்தைப் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்பதும் கதிரவன் ஒளியில் மூழ்குவதும் (Sun bath) நாம் நன்கு அறிந்ததே. அவர்கள் வெப்பத்தை வரவேற்பதுபோல நாம் குளிர்ச்சியை வரவேற்கின்றோம. வெப்பம் (Warm) என்னும் சொல் ஆங்கிலேயர்க்கு அணியியல் பொருளில் 'இன்பம்' என்னும் பொருளைக் குறிப்பது போலக் 'குளிர்ச்சி' என்னும் தமிழ்ச் சொல் நமக்கு 'இன்பம்' என்னும் பொருளைத் தருகின்றது. 'He gave me a *warm* welcome' என்பது ஆங்கில மரபு. அவன் என்னை, அகங் குளிர வரவேற்றான் என்பது தமிழ் மரபு. 'உச்சி குளிர்ந்தது' என்னும் பழமொழித் தொடர் அணியியல் பொருளில் அமைந்து உள்ளம் மகிழ்ந்தது, என்னும் பொருளை உணர்த்துவதை அறியலாம். 'நெஞ்சிலே ஈரம் இருக்கின்றதா? என்னும் கேள்விப் பழமொழியிலுள்ள 'ஈரம்' என்னும் சொல் அணியியல் பொருளில் அமைந்து அன்பைக் குறிக்கின்றது என்பது தெளிவு:

ஒரு கண்ணிலே வெண்ணெய்
ஒரு கண்ணிலே சுண்ணாம்பு

கட்டினவனுக்கு ஒரு வீடு, கட்டாதவனுக்கு ஆயிரம் வீடு. கோடி வித்தையும் கூழுக்கு முதலிய பழமொழிகளில் அணிநயம் அமைந்திருப்பதைக் காணலாம்.

பழமொழி அமைப்பு நயம்.

குழந்தைகள் ஒன்ருகவும், இரட்டையாகவும் மூன்ருகவும் பிறப்பது போலப் பழமொழிகளும் தோன்றியிருக்கின்றன. பெரும்பாலான குழந்தைகள் ஒற்றையாக—தனியாகப் பிறப்பது போலப் பெரும்பான்மைப் பழமொழிகள் ஒற்றையாகவே தோன்றியுள்ளன. இரட்டைக் குழந்தைப் பிறவி எண்ணிக்கையில் குறைவாக இருப்பது போல இரட்டைப் பழமொழிகளும் எண்ணிக்கையில் குறைவாக இருக்கின்றன. ஒரே பிறவியில் மூன்று குழந்தைகள் பிறப்பது மிகவும் அருகிக் காணப்படுவதுபோல மும்மடிப் பழமொழிகள் மிகக் குறைவாகக் காணப்படுகின்றன. தமிழ்ப் பழமொழி அமைப்பைப் பொறுத்த வரையில் ஒற்றைப் பழமொழி, இரட்டைப் பழமொழி, மும்மடிப் பழமொழி, நான்மடிப் பழமொழி என நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

ஒற்றைப் பழமொழி. (Single Proverbs.)

ஒரே கருத்துள்ளது ஒற்றைப் பழமொழி. ஒற்றைப் பழமொழி பொதுவாகச் சிறிதாகவும், சிறு வாக்கியத்தாலோ சொற்றொடராலோ அமைந்ததாகவும் இருக்கும் :

அகதிக்குத் தெய்வமே துணை
ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்
தை பிறந்தால் வழி பிறக்கும்
இஞ்சி லாபம் மஞ்சளில்
உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டு
தனி மரம் தோப்பாகுமா ?
அகராதி படித்தவன் அஞ்சிப் பேசுவானு ?
கடன் வாங்கியும் பட்டினியா ?
காணி ஆசை கோடிக் கேடு
சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்

மேற்குறிப்பிட்டவை யாவும் ஒற்றைப் பழமொழிகளுக்கு எடுத்துக்காட்டு.

இரட்டைப் பழமொழி. (Twin Proverbs)

தொடர்புள்ள இரண்டு கருத்துக்கள் கொண்டதும் இரு சிறு வாக்கியமாகவோ சொற்றொடராகவோ அமைந்திருப்பதும் இரட்டைப் பழமொழியாகும் இரட்டைப் பழமொழியை அதன் அமைப்பிலிருந்து மிக எளிமையாகக் கண்டு கொள்ளலாம்.

எவ்வளவு நெருங்கிய உறவினராக இருந்தாலும் தொலைவில் இருந்தால்தான் சிறப்பும் பெருமையும் உண்டு. உறவும் உறுதியாக நிலைபெற்றுச் சிறக்கும். அடுத்த வீட்டிலோ எதிர் வீட்டிலோ உறவினர்கள் குடியிருந்தால்—அருகில் இருக்கின்ற காரணத்தால் உறவு கெட்டுவிடும். இது யாரும் மறுக்கவோ மறக்கவோ முடியாத உளவியல் உண்மை. இவ்வுண்மையை தமிழிலுள்ள பழமொழி நன்கு விளக்குகின்றது. அப்பழமொழி இரட்டைப் பழமொழியாக அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. இதோ அப்பழமொழி :

அகல இருந்தால் நிகள உறவு
கிட்ட வந்தால் முட்டப் பகை

மாடு தொழுவத்தில் கட்டியிருந்த போதிலும் இங்கும் அங்குமாக அசைந்துகொண்டே தின்னும்.

ஆனால் வீடு அசையாமலே தின்னும்

வீட்டுக்கு ஆண்டுக்கொரு முறை வெள்ளையடிப்பதும் அவ்வப்போது பழுது பார்ப்பதும் அவற்றால் வீட்டு உரிமையாளனுக்கு ஏற்படுகின்ற பெருஞ்செலவும் அனைவரும் நன்கறிந்ததே.

அசைந்து தின்கிறது மாடு
அசையாமல் தின்கிறது வீடு

தமிழ் மொழியிலுள்ள இரட்டைப் பழமொழிகளில் ஒரு சிலவற்றை இங்குச் சான்றுக்காகக் குறிப்பிடுகிறோம். அவை பின் வருமாறு :

வாய் கரும்பு : கை இரும்பு.

வாய் வாழைப்பழம் ; கை கருணைக்கிழங்கு.

அழச் சொல்லுகிறவன் பிழைக்கச் சொல்லுவான் ; சிரிக்ச் சொல்லுகிறவன் கெடச் சொல்வான்.

அள்ளிக் கொடுத்தால் சும்மா; அளந்து கொடுத்தால் கடன்.

அள்ளாது குறையாது: சொல்லாது பிறவாது.

ஆறு போவதே கிழக்கு; அரசன் சொல்வதே வழக்கு.

யானை விழுந்தால் தந்தம்; புலி விழுந்தால் தோல்.

இணங்கினால் இனிப்பு; பிணங்கினால் கசப்பு.

கூழானாலும் குளித்துக் குடி; கந்தையானாலும் கசக்கிக் கட்டு.

பாத்திரம் அறிந்து பிச்சை இடு: கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு

தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதித்தவன் வினை அறுப்பான்.

பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு.

கார்த்திகைக்குப் பின் மழையில்லை; கர்ணனுக்குப் பின் கொடையில்லை.

அரசன் அன்று கொல்லும்; தெய்வம் நின்று கொல்லும்.

ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.

சத்திரத்திலே சாப்பாடு: சாவடியிலே படுக்கை.

தமிழில் இரட்டைப் பழமொழிகள் இருப்பதைப் போல ஆங்கிலத்திலும் உண்டு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஆங்கிலத்திலுள்ள இரட்டைப் பழமொழிகளில் சில பின் வருமாறு:-

Love is potent; Money is Omoripotent.
அன்பு வலிமையுடையது: பணம் அனைத்து வல்லமை யுடையது.

Man proposes; God disposes.
மனிதன் ஒன்று நினைக்கிறான்; தெய்வம் மற்றொன்று நினைக்கின்றது.

The cross on the breast; and the devil in the heart.
புறத்திலே பக்தியும்; அகத்திலே வஞ்சமும்.

Speech is silver ; Silence is gold.
பேச்சு வெள்ளி ; அமைதி தங்கம்.

To err is human ; To forgive is Divine.
குற்றம் புரிவது மனித இயல்பு ; மன்னிப்பது தெய்வீகம்.

After dinner sit a while ; After Supper walk a mile.
பகலுணவுக்குப்பிறகு சிறிது இளைப்பாறு ; இரவு உணவுக்குப்பின் ஒரு மைல் நட

தமிழிலும் ஆங்கிலத்திலுமுள்ள இரட்டைப் பழமொழிகளில் சிலவற்றை ஒருவாறு இங்குக் கண்டோம்.

மும்மடிப் பழமொழிகள். (Triple Proverbs)

இரண்டு கருத்துக்கள் கொண்ட பழமொழிகள் இரட்டைப் பழமொழிகளாகத் திகழ்வதைப்போல மூன்று கருத்துக்கள் கொண்ட பழமொழிகள் மும்மடிப் பழமொழிகளாக விளங்குகின்றன. மும்மடிப் பழமொழி தோற்றத்தால் ஒரே பழமொழியாகத் தோன்றினும் அதில் முக்கூறுகள் அமைந்திருப்பதைக் காணலாம்

அடுத்துக் கெடுப்பான் கபடன், கொடுத்துக் கெடுப்பான் மார்வாடி, தொடுத்துக் கெடுப்பாள் மடந்தை

அருள் வேண்டும், பொருள் வேண்டும், அடக்கம் வேண்டும்.

அருள் வேண்டும், பொருள் வேண்டும், ஆகாய வாணி துணை வேண்டும்

கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய், தீர விசாரித்தது மெய்.

மிகுதியாகச் சிந்தனை செய், குறைவாகப் பேசு, மிகக் குறைவாக எழுது, என்பது

ஆங்கிலத்திலுள்ள மும்மடிப் பழமொழி :

'Think much, Speak like, and write less,'

தமிழ் மொழியில் மும்மடிப் பழமொழிகள் எண்ணிக்கையில் மிகக் குறைந்துள்ளன என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

நான்மடிப் பழமொழியும், ஐம்மடிப் பழமொழியும்.

Quadruple & Quintuple Proverbs.

நம்மிடத்தில் அய்யாசாமியைப் பற்றி ஒரு நகைச்சுவையான கதை உண்டு.

தமிழ் நாட்டில் அய்யாசாமி என்று ஒரு கஞ்சன் இருந்தான். அவன் வடிகட்டின கஞ்சன். கஞ்சனிலே கஞ்சன் கடைந்தெடுத்தக் கஞ்சன் அய்யாசாமி. அவன் தன் திருமண விழாவைக் கொண்டாடிய செய்தியை ஒரு பழமொழி இனிது விளக்குகின்றது. அப்பழமொழி நான்மடிப் பழமொழியாக அமைந்திருப்பது இங்கு ஆழ்ந்து நோக்கத்தக்கது.

அய்யாசாமிக்குக் கலியாணம், அவரவர் வீட்டிலே சாப்பாடு, கொட்டு முழக்குக் கோயிலிலே, வெற்றிலை பாக்குக் கடையிலே. இப்பழமொழியுடன் சுண்ணாம்பு சூளையிலே என்னும் மேலும் ஓர் உண்மையைச் சேர்த்து ஐந்துமடிப் பழமொழியாக வழங்குவதும் உண்டு.

இதோ ஐந்துமடிப் பழமொழியின் முழு உருவம்;

அய்யாசாமிக்குக் கலியாணம், அவரவர் வீட்டிலே சாப்பாடு, கொட்டு முழக்குக் கோயிலிலே; வெற்றிலை பாக்குக் கடையிலே, சுண்ணாம்பு சூளையிலே.

தமிழ் மொழியில் ஒற்றைப் பழமொழி, இரட்டைப் பழமொழி, மும்மடிப் பழமொழி, நான்மடிப் பழமொழி, ஐந்துமடிப் பழமொழி என ஐவகை அமைப்புள்ள பழமொழிகளை இங்குச் சுருக்கமாகக் கண்டோம்.

வினாப் பழமொழிகள்,

(Interrogative Proverbs)

சாதாரண வாக்கியமான (assertive sentence) அமைந்துள்ள பழமொழிகளைவிட வினா வடிவத்தில் அமைந்துள்ள பழமொழிகளுக்கு அதிக ஆற்றல் உண்டு. அடுக்குகிற அருமை உடைக்கிற நாய்க்குத் தெரியுமா? என்னும் வினாப் பழமொழிக்கு அதிக வேகம் இருப்பதைக் காணலாம். 'அவரை விதைக்கத் துவரை முளைக்காது' என்பதைவிட 'அவரை விதைக்கத் துவரை முளைக்குமா?' என்னும் வினாப் பழமொழி

குயில் விடு தூது.

(திரு. சோம. செல்வகுமார்.)

(திருச்சி, தூயவளவர் கல்லூரிக் கவியரங்கில் அரங்கேற்றப்பட்ட கவிதை.)

பெருக்கமுடன் காவலரை யகலச்செய்
பெருங்குயிலே நின்றன் செவ்வாய்க்
குருக்கமுடன் முகமலர்ந்தே ஒருமுத்தம்
தந்திடுவேன் குறுகா நின்று

[317-ஆம் பக்கத் தொடர்ச்சி]
யில் கூர்மை மிகுதியாக இருப்பதைக் காணலாம். வேகம், கூர்மை, ஆற்றல் ஆகியவை கருதித் தமிழிலுள்ள பல பழமொழிகள் வினுக்களாகவே அமைந்துள்ளன. சிலவற்றை இங்கே காணலாம் :-

அறிவு கெட்டவனுக்கு யார் சொல்லியும் என்ன ?

அரைக் காசுக்குப் போன மானம்

ஆயிரம் கொடுத்தாலும் வருமா ?

ஆசை காட்டி மோசம் செய்யலாமா ?

ஆதாயம் இல்லாத செட்டி ஆற்றைக்கட்டி இறைப்பானு ?

பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா ?

இரும்பை எலி தின்னுமா ?

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆகுமா ?

கம்மாளன் நாய் சம்மட்டித் தொனிக்கு அஞ்சுமா ?

கூழுக்கு மாங்காய் தோற்குமா ?

கொக்குக்கு உண்டா வீர சைவம் ?

சும்மா கிடந்த அம்மையார்க்கு அரைப்பணத்துத் தாலி போதாதா ?

பொன் குடத்துக்குப் பொட்டிட வேண்டுமா ?

மேற்குறிப்பிட்ட வினுப் பழமொழிகள் கருத்தை மிகக் கூர்மையாக உணர்த்துவதை அறியலாம்.

சுருங்கக் கூறுமிடத்துத் தமிழ்ப் பழமொழிகள் பல்வேறு நயங்களைக் கொண்டு சிறந்து விளங்குகின்றன.

வருக்கமுடன் என்மனதைப் பறிகொண்டான்
    வகைபெறவே வாழி டத்தைத்
தருக்கமுடன் விரைந்தடைந்து கவலொழியுந்
    தகையுரைகள் கூறி டாயோ? [1]

பால்போன்ற நிலவுவீசி காலமதில்
    பண்புடைநற் குயிலே! இஞ்சொல்
மால்போன்ற நிலையாக்கு முறைநவின்று
    மனத்தினையே கவர்ந்து மேலும்
சேல்போன்ற ஒளிவிழியாம் வேலினையே
    அகப்படுத்திச் சென்றான் இன்று
கால்போன்ற நிலையிலவன் திரியுமிட
    மெணர்க்குணர்த்திக் கவலை தீர்ப்பாய்! [2]

ஐந்துபெருங் கள்வர்வசங் கைப்பட்டிங்
    கலையுறுபே ரிடரை நீக்கி
மைந்துபெரு மாற்றலுடன் நள்ளிரவி
    லெனைக்கூடிக்கு ழைந்து மேன்மேல்
நைந்துபெரு நிலைநீக்கி நல்லின்ப
    மெனக்களித்து நகர்ந்து சென்றோன்
ஐந்துபெரு மின்பளிக்கு மருங்குயிலே!
    அகன்றவிடம் சாற்றி டாயோ? [3]

பேர்நாதக் கனலெழுநற் றமிழ்ச்சோலை
    யதன்சார்பின் பெட்பு சேரும்
சேர்காத லுகந்தளித்துச் சுகந்தந்தான்
    திருப்பாத வருளைச் சேர
ஏர்காத லுடன்யானு மழைக்கின்றேன்
    சீர்மையுறு குயிலே! என்றன்
சீர்காதலைச் சேர்க்கஅவ னென்றுதிரு
    உள்ளங்கொண் டென்னைச் சார்வான்? [4]

பண்ணுறுசேர் கவிபாடும் பண்புடைநற்
    செங்குயிலே! பறந்து சென்று
கண்ணுறுநன் னிலையில்லாக் குழவியைப்போல்
    மனங்கலங்கும் கருமம் தன்னால்
புண்ணுறுபே ரிடருற்றாள் நினதடியாள்
    எனஅவனுக் கெடுத்துச் சாற்றி
எண்ணுறுநல் லின்பமதை யான்பெறவே
    எழிற்றூதை ஏற்றி டாயோ? [5]

[320-ஆம் பக்கம் பார்க்க]

பழங்கனவாய்ப் போனதுவோ?

புலவர். திரு. துரை. பிச்சை.

[பன்னிருசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.]

பொற்றொடியே பூங்குழலே பூண்டதென்ன மாற்றம்
சாற்றடியே இதனையென் உன்றனுக்கே ஏற்றம்
போற்றுகின்ற அன்பினிலே பொய்மையிலை தேற்றம்

கூற்றனைய கொலைநோக்கால் உயிர்கொண்டாய் மேவிக்
குழையோடு மாறாடு மோர்நோக்கால் ஆவிக்
கின்மருந்தாய் இன்பத்தை வழங்கிட்டாய் அன்று

[319-ஆம் பக்கத் தொடர்ச்சி]

பார்மணக்குந் தென்றலுடன் அலர்மணக்கும்
பருவத்தில் ஆர்வ முற்ற
பேர்மணக்கு மனையளொடு வஞ்சமிலா
தஞ்சுகமே போலக் கொஞ்சி
ஏர்மணக்குங் கன்னலமு தெனக்களித்தான்
கரந்தவிடங் குயிலே நாடி
நேர்மணக்கு மழகனைநீ பொருத்துவித்துக்
கலிதீர்க்க நேர்ந்து நிற்பாய்! [6]

பேராரு மிசைபாடும் பெருங்குயிலே!
உதயமுறும் இரவி தன்னில்
சீராரு மவன்முகத்தைக் கண்ணுற்றேன்
திகழ்ந்ததிருக் குயிலே! யன்னோன்
ஏராரு மதிமுகத்தில் செழித்தநகை
கொண்டனிலை கண்டேயானும்
பேராரும் பணியியற்ற அவன்முகிலை
முத்தமிடும் மின்னல் போன்றான்! [7]

மலர்போன்று மருவும்நல் வாழ்க்கைதனில்
மாண்புற்ற கருணை காட்டி
யலர்போன்று முகிழ்முறுவல் தோற்றுவித்தாங்
கென்றனையே மாழ்கச் செய்து
நலர்போன்று நடித்தபெரு மருட்டலைவன்
நண்ணியபே ரிடந்தான் யாதோ?
பலர்போற்றும் மாங்குயிலே! பாவனைசேர்
நற்செய்தி பகராய் கொல்லோ! [8]

ஊன்றின்பந் தருகின்ற உருவெழிலே! உள்ளம்
உவப்பூட்டும் மாமயிலே! மான்பிணையே! நன்றும்
வான்பிறையே! மகிழ்வெங்கே ஒளித்துள்ளாய்
இன்றே!

காற்றைப்போல் கலந்துநிதம் கனிந்தபெருங் காதல்
களிப்பெல்லாம் பழங்கனவாய்ப் போனதுவோ
பேதாய்!
கரைகடந்த துயர்க்கடலுள் கலங்குகின்றேன்
காப்பாய்!

காதலெனும் விண்ணகத்தே கட்டறுந்த வண்ணக்
காற்றாடிச் சுழல்வதுபோற் கவலையின்றி இன்பாய்
நாம்பறந்த காலமெலாம் நினைத்தனையோ கண்ணே!

சாதிமுறை வேரறுத்துச் சமுதாய மென்றுஞ்
செழித்திலங்கப் புதுமைமணஞ் செய்வமென்றாய்
சாற்றுஞ்
செவிலித்தாய் இற்செறிக்க மறந்தனையோ
பெண்ணே!

ஓதியொழு கைந்திணையின் ஒழுக்கநெறி ஓம்பி
ஒண்புலவோர் புகழ்ந்தேத்தும கற்பமைந்த வாழ்வில்
ஒளிகாண்பாம் என்றதெலாம் துறந்தனையோ
கோதாய்!

மாதிவளை மறத்தலுமே உமக்காமோ என்றாய்
மறப்பறியா எனைமறந்தாய்! பண்டுரைத்த தேனும்
மொழியெல்லாம் பழங்கனவாய்ப் போனதுவோ
மானே!

உடல்மேல்தான் உயிர்வந்தே ஒன்றுவது போல
உயிருடனே ஒன்றிவிட்டேன்; உயிர்மெய்யாய்
யாண்டும்
உலவிடுவோம் என்றதுவும் பழுதாமோ பாவாய்!

உடனுயிரால் உக்குறளில் உயிரோடும் உண்மை;
உயிரிருக்க உடம்பனையாய் நீமறந்தாய் நன்னூல்
மொழிமரபில் மெய்மறைதல் பொருந்துவதோ
நல்லாய்!

முக்கட்பிரானும் நக்கீரனும்.

திரு. புலவர். இ. ஆளவந்தார்.

பூவும் புலவரும் ஒன்ருவர். மிக மென்மையானது பூ. வன்மையருகி மென்மை மிகப் பெற்றவர் புலவர். ஆசிரியர்க்கு இலக்கணம் கூறவந்த பவணந்தியார், மங்கலப்பொருளாய், இன்றியமையாததாய், யாவரும் விரும்பி மேற்கொள்ளத்தக்க பூவைப் புலவர்களின் நல்லியல்புக்கு உவமை கூறினுர். மாக்களின் இழி நிலையிலிருந்து நாகரீகத்தில் உயர்ந்துள்ளோரை மக்கள் என்பதுபோல மக்களுள்ளும் கூர்த்த மதியினராய் 'மென்மை' பெற்ருேரே புலவர். புலவர்களை 'மென்மையுடையார்' என்று அறநெறிச் சாரம் கூறும் இனி 'திவ்' என்ற வேர்ச் சொல்லடியாகப் பிறந்த தேவர் என்ற சொல்லும் உள்ளொளி பெற்ற புலவர்களை உணர்த்துவதாகும். 'புலவரைப் போற்ருது புத்தேளுலகு' என்ற குறளடி இதனை வலியுறுத்துவதாகும். எனவே புலவர் என்பார் பூவனைய மென்மையும், உள்ளொளியும் ஒருங்கேயுடையார் என்பதுபோதரும். போருக்குச் செல்லும் புனைகழல மறவர் அடையாளமாகப் பூவையணிவர். வன்முறை நிறைந்த போருக்கும் மென்மை மிளிரும் பூவுக்கும் பொருத்தமென்னை? ஆடவரும் பெண்டிரும் கூடிய அமைப்பே மன்பதையாகுமன்ருே அங்ஙனமே வன்மையும் மென்மையும் இயைந்ததே இவ்வுலகம் என்பதை அறிவித்தற் பொருட்டேயாம்.

மொழியென்பது முற்காலத்தில் தம் கருத்தினை அறிவித்தற்குக் கருவியாயிருந்தது. ஆனுல் இக்காலத்தில் சிலர் தம் எண்ணத்தை மறைத்தற்கும் மொழியைக் கருவியாக்குகின்றனர். உண்மையை உள்ளவாறு உரைத்தால் சிலர் சீற்றம்

[321-ஆம் பக்கத் தொடர்ச்சி]

நெடிலுடனே குறில்சேளர் அளபெடைபோல் ஒன்றி
நின்னுடனே வாழ்விலென்றுஞ் சேர்ந்திசைப்பேன் என்றே
நாட்குறியுள் நவின்றமொழி நைந்ததுவும் நன்ருே?

தடங்கண்ணுய் வல்லினமும் மெல்லினமும் தாமே
புணர்ச்சியிடை யியைதல்போ லிணைந்திடுவோமென்று
உணர்ச்சியிடை மொழிந்தமொழி பொய்த்ததுவோ சொல்லாய்;

கொள்ளக்கூடும் என்ற அச்சத்தால் பொய் என்ற ஆடையை யும் புனைந்துரை என்ற அணிகலனையும் அணிவித்து நாகரீக உலகில் உலாவிவர, விடவேண்டியுள்ளது. ஆடையணியற்ற உண்மை அம்மணமாகப் புறவுலகிற் போதரும் தகுதியற்றது போலும்.

'ஐயப்படாது அகத்தது உணர்வானைத் தெய்வத்தோடு ஒப்பக்கொளல்' என்றார் வள்ளுவப் பெருமான். ஆகவே செவிப்புலனும் சொல்லோசையைக் கடந்து அகத்திலுள்ளதை அறியவல்லாரே உண்மையின் இயல்பைக் கண்டோராவர். உள்ளத்தை ஊடுருவிக் காணவல்ல அத்தகைய ஆற்றல் சில சான்றோர்க்கு அமைந்திருந்தது. அவர்கள் 'திறவோர்' என அழைக்கப்பெற்றனர். இத்தகைய 'திறவோர் காட்சி' புல னடக்கம் பெற்றார்க்கே வாய்க்கும். இது கல்வியறிவால் மட்டும் அமைவதன்று ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்கு வோர்க்கே ஒல்வதாம்.

விடுக்கும் வினாவிற்கே யன்றி, நெஞ்சில் நிற்கும் ஐயத்தை யும் அகற்றும் ஆற்றல் அரிதாகச் சில செந்தமிழ்ப் புலவர்பால் அமைந்திருந்தது. வெளிக்காட்சியற்ற வீரராகவ முதலியார் இலங்கைவேந்தன் பரராச சிங்கனது ஐயத்தை இவ்வாற்ற லாலேயே அகற்றினார்.

நக்கீரர் உட்பட அவர் காலத்திலிருந்த சங்கப் புலவர் எவரும் இத்தகைய 'திறவோர் காட்சி' யுடையாரல்லர். நக்கீரர் தொன்னூற் பயிற்சிமிக்குடையார். நூலறிவு எத்துணை நிரம்பி வழிந்ததோ அத்துணை அகந்தையும் அவர் நெஞ் சத்து நிமிர்ந்து நின்றது. அத்தகைய அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுத்து அவருள்ளத்து ஒளி விளக்கு ஏற்றவே உளங் கொண்டார் இறைவன்.

புலவர் மற்றொரு புலவரை வென்றால் அஃது தோற்ற வரது புலமைக்கு இழுக்கு எனவே புலமைக்கு இழுக்கு நேரா வண்ணம் 'தருமி' என்ற பூசாரியைக் கொண்டு கருத்தை நிறை வேற்றிக்கொண்டார் கண்ணுதற் பெருமான்.

பாண்டியன் தன் மனத்தில் எழுந்த ஐயத்தைப் புலவர் கட்கு வெளிப்படுத்தவில்லை. அதனையறிந்து தெளிவுபடுத் துதல் யாங்ஙனம்? இஃது அலகுசால் கல்வியால் அமை வதோ? அன்று தருமி கற்றறிவில்லான் எனினும் அரன் மாட்டு அன்புடையான் எனவே அவன் பொருட்டு அருளினார்

இளங்கோவடிகள் தமிழ்க் கழக வெள்ளி விழா.

கண்ணுதற் கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த நம் பசுந்தமிழ் வேற்று நாட்டவர் ஆட்சியாலும், மாற்றுமொழித் ஆதிக்கத்தாலும் பொலிவிழந்து தளர்வுற்றபோது, தமிழினைப் பேணிப் பாதுகாக்க வீறுகொண்டெழுந்த தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட, கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழக வெள்ளி விழா, திருவள்ளுவர் ஆண்டு 2001, மாசித்திங்கள் 15, 16, 17 (26, 27, 28—2—70) ஆகிய மூன்று நாட்களிலும் முத்தமிழ் விழாவாகக் கொண்டாடப் பெற்றன.

[323-ஆம் பக்கத் தொடர்ச்சி]

அண்ணல். செய்யுள் பொருட்குற்றமுடையது என்ற நக்கீரனைத் தெருட்டினான் ஈசன்? இயற்கை மணமுடைய கூந்தலைக்கொண்ட மங்கையை நக்கீரன் முன் நிறுத்தி முகர்ந்து பார்க்கச்செய்தல்லவா மெய்ப்பித்திருக்கவேண்டும். இதனைச் செய்யாது அரனார் நெற்றிக்கண்ணைக் காட்டி அவனை அடக்கியது ஏன்?

மகளிரின் கூந்தலுக்கு மணமுண்டென்பதை நக்கீரன் அறியானா? ஒவ்வொருவர்க்கும் தனிமணம் உண்டென்பதை மோப்பம் பிடிக்கும் நாய்கூட நன்கறியுமே. மண்ணால் இயன்ற இவ்வுடம்புக்கு மண்ணின் தன்மாத்திரையாகிய மணம் இருத்தல் இயல்பே. கற்றறிபுலவன் காணாததா இது? அற்றன்று: தான் தலைமை தாங்கும் சங்கப்புலவரால் ஒல்லாத வொன்றை ஒன்றுக்கும் பற்றா பூசாரி ஆற்றுவதா என்ற தருக்கே நக்கீரன் உளத்தே தலையெழுந்து நின்றது. கல்வித் திறமையால் வாதிட்டு மாற்றானை வீழ்த்த விரும்பினானேயன்றி நக்கீரன் உண்மையை யுணரவோ, உணர்த்தவோ தக்க நிலையிலில்லை.

எனவே ஈசன் முதற்கண் நக்கீரனது அகந்தையைத் தீவிழியால் அழித்தான். 'ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள' ஒரு வழிப்பட்டு இறைவழிபாடு இயற்றற்குரியது. சிதறாத சிந்தையுடன் செய்யத்தக்க பூசை முறையில வழுவிய கீரனைப் பூதத்தால் எடுப்பிக்கச் செய்து திருமுருகாற்றுப்படை தந்தருளினன். இறைவனின் அருட்டிறம் உயிர்களின் ஆன்ம வளர்ச்சியின் தகுதிக்கேற்பப் பல்வகையில் வெளிப்படும்.

26—2—70 வியாழக்கிழமை மாலை 4-மணி அளவில் இயற்றமிழ் விழாத் தொடங்கியது. தமிழவேள் பி டி. இராசன் (மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவர்) அவர்கள் தலைமையேற்க வந்தபோது, இராதாகிருட்டின இளநிலைப் பள்ளியின் சின்னஞ் சிறு மாணவியர் 'வானூர்ந்த பொதியின் மிசை'.— 'மருங்குவண்டு சிறந்தார்ப்ப'—எனும் பாக்களின் இசைக்கேற்ப நடனமாடியும், மலர்கள் தூவியும், சங்க நுழைவாயிலிலிருந்து தமிழவேள் அவர்களை, ஊர்வலமாகத் தமிழ்ப் பெருமன்றத்திற்கு, வரவேற்று அழைத்து வந்தனர்.

விழாத் தொடக்கத்தில் கல்லூரி மாணவியர் இறை வணக்கம் பாட, கல்லூரி முதல்வரும், இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின் தலைவருமான பேராசிரியர். திரு. இரா. செயச்சந்திரன், எம்.ஏ , அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினுர்கள்.

பின்னர்த் தமிழவேள். பி டி. இராசன் அவர்கள் கல்லூரி மாணவர்க்கெனக் கட்டப்பெற்ற, படிப்பகக் கூடமாகிய இளங்கோவடிகள் இல்லத்தைத் திறந்து வைத்தும், விழா மலரை வெளியிட்டும் பேசும்போது:- வெறும் பேச்சு நாட்டுக்குப் பயன் தராது. நாடு வளம்பெற வேண்டுமாஞல் எல்லாரும் நேரிய முறையில் கடுமையாக உழைக்க வேண்டுமென்றும் வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் நேர்மையுடனும் நடுநிலை நோக்குடனும் நடக்கவேண்டுமெனவும் கூறிஞர்கள். அடுத்துக் கழக வெள்ளி விழாவை முன்னிட்டு நடத்தப்பெற்ற, பேச்சுப் போட்டி, இசைப் போட்டி. மாறுகோலப் போட்டி என்றிவற்றில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுப் பொருட்களை வழங்கிப் பாராட்டிஞர்கள். இதன்பின், பேச்சுப் போட்டியிலும், இசைப் போட்டியிலும் வெற்றி பெற்றோர் முறையே பேசியும், பாடியும் அவையோரை மகிழ்வித்தனர். இதனைத் தொடர்ந்து திரு. K S. மகாதேவன், எம்.ஏ., (சென்னை, மாநிலக் கல்லூரி—இணைப்பேராசிரியர்) அவர்கள் கண்ணகிக்குச் 'சிலை எடுத்த செம்மல்' சேரன் செங்குட்டுவனின் சிறப்புப் பற்றியும், நாகைத் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர், முதுபெரும் புலவர். ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'சங்கக் காலச் சமுதாய அமைப்பு'ப் பற்றியும் அரிய ஆராய்ச்சிக் கருத்துக்களை அள்ளி வழங்கினர். செயலாளர் நன்றி நவில, சங்க வாழ்த்தும் நாட்டு வாழ்த்தும் பாடப் பெற்று முதல் நாள் கூட்டம் இனிதே முடிவுற்றது

இரண்டாம் நாள் 27—2—70 வெள்ளி மாலை 4-மணிக்கு நடைபெற்ற இசைத் தமிழ் விழாவில் முத்தமிழ்க் காவலர்.

கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமை ஏற்றுத் தமிழின் தொன்மை, பெருமை. தமிழிசை இயக்கம் தோன்றக் காரண மாகவிருந்த நிகழ்ச்சி, தமிழிசை இயக்கத்திற்குத் தொடக்கக் காலத்தில் ஏற்பட்ட இடையூறுகள் முதலியன குறித்துக் கருத் தாழம் மிக்க நகைச்சுவை விருந்தினை நல்கினார். பண்ணாராய்ச்சி வித்தகர். குடந்தை. ப. சுந்தரேசனார் அவர்கள் இசையும் சுரமும், பண்ணும் இராகமும், பாலையும் மேளமும் என்னும் தலைப்புக்களில் தமிழிசையின் நுணுக்கங்கள் வெள்ளறிவினார்க் கும் தெள்ளிதின் விளங்க இனிதெடுத்து இயம்பினார். விழாவில் இசைபொழிய வந்த மதுரை சோமசுந்தரம் அவர்கட்கு, விழாக் குழுவின் சார்பில் 'ஏழிசை முகில்'—எனும் பட்டம் வழங்கப் பெற்றது.

திரு. சோமசுந்தரம் அவர்கள் தமக்கு அளிக்கப்பெற்றப் பட்டத்திற்கு ஏற்ப இசை மழை பொழியும் முகிலாக விளங்கி இசைக்கடலில் அவையோரை மூழ்கவைத்தார். விழா முடிவில் சங்க, நாட்டு வாழ்த்துக்கள் பாடப்பெற்று, இரண்டாம் நாள் கூட்டம் இனிது முடிந்தது.

28—2—70 சனிக்கிழமை மாலை 5-மணிக்கு மூன்றாம் நாள் நிகழ்ச்சித் தொடக்கம் பெற்றது. நாடகத் தமிழ் விழாவிற்கு, திருச்சி பெரியார் கல்லூரி முதல்வர். பேராசிரியர். திரு. அ. கிருட்டினமூர்த்தி, எம்.ஏ., பி எல்., பி.ஓ.எல்., (ஆனர்சு) அவர் கள் தலைமை ஏற்றார்கள். தமிழ் மொழி வளர்ச்சிக்கானத் திட் டங்களைப்பற்றித் தம் பேச்சில் குறிப்பிட்டார்கள். அண்ணா மலைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித்துறைத் துணைப் பேரா சிரியர். திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள் 'புலவர் தொழில்' எனும் தலைப்பில் சொற்பெருக்காற்றினார். பின்னர், கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடந்தேறின. பேராசிரியர். திரு. த. ச. பாலசுந்தரனார் அவர்களால் எழுதப்பெற்று பேரா சிரியர். திரு. சி. கோவிந்தராசனாரால் இயக்கப்பட்ட வேள் எவ்வி எனும் நாடகம் சிறப்புற மாணவரால் நடிக்கப்பெற்றது. இறுதியில் துணைச்செயலாளர் நன்றி கூற, சங்க, நாட்டு வாழ்த்துக்கள் பாடப்பெற்று வெள்ளி விழா இனிதே நிறை வேறியது.

இம்மூன்று நாள் நிகழ்ச்சிகளுக்கும் நகரப் பெருமக்களும், தமிழன்பர்களும். சங்கத்தாரும் புலவர் பெருந்தகையினரும் பெரும் அளவில்வந்திருந்தனர். இளங்கோவடிகள் தமிழ்க்கழக வெள்ளி விழா வந்திருந்தோர் யாவருக்கும் சிந்தைக்கினிய, செவிக்கினிய, கண்ணிற்கினிய விழாவாக விளங்கிற்று.